www.tamilarangam.net

தோழர் றொபேட் (தம்பிராசா சுபத்திரன்)



ஆக்கம்:
1957-12-24

அழிப்பு:
2003-06-14
உமக்கு

எமது

வீர

அஞ்சலிகள்

மீண்டும் ஒரு மகத்தான தமிழ் மனிதனின் உயிரை குடித்து புலிகள் தம் கொலைவெறி அரசியலை நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

அவர் வேறு யாருமல்ல, கடந்த கால் நூற்றாண்டு காலமாக தனது சொந்த வாழ்வை முன்னிலைப்படுத்தாது தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் சமூக நீதிக்காகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் அமைப்பில் சேர்ந்து போராடிய ரொபேர்ட் என்று அழைக்கப்பட்ட தம்பிராசா சுபத்திரனே புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர் .

அவர் வெறுமனே ஒரு போராளியாகவோ அல்லது தலைமைத்துவத்தின் மீது மூடத்தனமாக நம்பிக்கை வைத்து இன்று மண்ணுக்குள் புதையுண்டு போயிருக்கும் ஆயிரக்கணக்கான மாவீரர்களாகவோ தன் வாழ்வை மட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஒரு போராளியாகவும் அரசியல் செயல்பாட்டாளனாகவும் மனிதாபிமானம், மக்கள் சேவைக்கான அர்ப்பண உணர்வு, மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் ஜனநாயக சிந்தனை என்பனவற்றையே தனது அரசியல் பாதையின் படிக்கற்களாக கொண்டிருந்த மகத்தான மனிதன்.

கடந்த 20 ஆண்டுகளாக தமிழர் சமூகத்தின் அரசியல் வானில் நிலவுகின்ற காரிருளை நீக்க முயன்ற நட்சத்திரங்களில் ஒருவனான சுபத்திரன் இன்று புலிகளின் பாசிச வெறியால் தனது பாதிப்பயணத்திலேயே சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றான். தமிழர்களின் அரசியல் பாதைக்கு ஒளியூட்ட முயன்ற எத்தனையோ தமிழ்த் தலைவர்கள், தமிழ்ச் சமூகத்தில் ஜனநாயக கருத்துக்களை நிலைபெறச் செய்ய முயற்சித்தவர்கள் பலர் புலிகளின் துப்பாக்கிகளால் பலி கொள்ளப்பட்டுள்ளனர். ராஜினி திராணகம, பத்மநாபா, தங்கத்துரை, யோகேஸ்வரன், சரோஜினி யோகேஸ்வரன், அமிர்தலிங்கம், சாம் தம்பிமுத்து, பொன் சிவபாலன், நீலன் திருச்செல்வம், மதிமுகராசா, செழியன் பேரின்பநாயகம், செல்விநிதி தியாகராசா, விமலேஸ்வரன், சபாலிங்கம் என புலிகளின் இக்கொலைப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். ஆனால் இன்னும் இக் கொலைப் பட்டியல் நீண்டு கொண்டேதான் இருக்கின்றது.. இதற்குப் புறம்பாக சந்தேகத்தின் பேரில் புலிகளால் கொல்லப்பட்ட பொது மக்கள் ஏனைய இயக்கங்களின் சக இயக்கப் போராளிகள் என்போரின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டும்.

கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக இலங்கை அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வரும் வேளையிலும் கூட ஏனைய மாற்று கருத்துக் கொண்டவர்களையும், ஏனைய இயக்கங்களின் அங்கத்தவர்களையும், மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளையும் புலிகள் தொடர்ந்தும் கொலை செய்து வந்ததன் மூலமும் அண்மையில் நிகழ்த்தப்பட்ட சுபத்திரனின் கொலை மூலமும் தமது கொலை வெறி அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கலாசாரத்தை அவர்கள் கைவிடவில்லை என்பதையே புலிகள் மீண்டும் நிருபித்துள்ளனர்.

கூன் விழுந்த சமூகத்தில்
கொலைஞர்களே கோலோச்சுவர் !

தமிழ் மக்களின் இன்றைய நிலை

இலங்கை அரசாங்கங்களினால் தொடுக்கப்பட்ட நீண்ட கால யுத்தத்தின் அவலங்களாலும் புலிகளின் எதேச்சாதிகாரமான பாசிச செய்றபாடுகளின் துன்பங்களினாலும் திணறிக் கொண்டிருந்த தமிழ் மக்கள், அரசாங்கமும் புலிகளும் யுத்த நிறுத்தம் செய்த போது தங்களுக்கான விடிவு காலம் வந்து விட்டதென எண்ணி நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் அந்த மகிழச்சி நீண்ட நாள் நீடிக்கவில்லை. புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, வன்னிக் காடுகளுக்குள்ளும், கிழக்கு மாகாணத்தின் காடுகளுக்குள்ளும் ஒழிந்திருந்த புலிகள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளுக்குத் திரும்பிய போது புலிகள் தம்மை ஜனநாயகமயப்படுத்திக் கொண்டு விடுவார்கள் என நம்பியே மக்கள் அவர்களை வரவேற்று தோள்களில் சுமந்து சென்றனர்.

ஆனால் மக்கள் நினைத்ததை விட நிலமை தலைகீழாகவே மாறியது. புலிகள் தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் நிகழ்த்தி வந்த காட்டுத் தர்பாரை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரித்ததே நிகழ்ந்தது . கடுமையான வரி வசூலிப்பு, சிறுவர் சிறுமியரை பலாத்காரமாக பிடித்துச் செல்லுதல், சந்தேகமானவர்களை கொலை செய்தல், கொடூரமாக தாக்குதல் போன்றவற்றையே தம் அரசியல் செயல்பாடுகளாக புலிகள் செயல்படுத்தினர். தமிழ் மக்களுக்கு இன்று வடகிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த அவல நிலையை பெரும்பாலான தமிழ் மக்களும், தமிழ் புத்தி ஜீவிகளும், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்த தமிழர்களும் நன்கு அறிந்து மனதளவில் வெறுத்துக் குமைகின்ற போதிலும் புலிகளின் துப்பாக்கிகளுக்கு முன்னால் மௌனித்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இதனால்தானோ என்னவோ அதிகார வெறி கொண்ட, ஜனநாயகத்தின் மதிப்பறியாத, கபடத்தனமான சில புத்திஜீவிகளும், சில குழுக்களும் புலிகளின் இக்கொலை வெறி அரசியலுக்கு சாமரம் வீசி அவ்வரசியலை நியாயப்படுத்தி மொத்தத் தமிழ்ச் சமூகத்தையுமே சுடுகாட்டை நோக்கி இட்டுச்செல்லும் பணியை மிக சுதந்திரமாக மேற்கொண்டுள்ளனர். இச்செயற்பாட்டினால் இறுதியில் எஞ்சப்போவது விடுதலைப் பெற்ற தமிழ்ச் சமூகமல்ல மாறாக சிந்தனை ரீதியாக மலடுதட்டிப் போன அரசியல் ரீதியாக முதுகெலும்பு உழுத்துப் போய் ஓர் கூன் விழுந்த அடிமை கும்பலே ஆகும்.

அரசாங்கமும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமிழர்களின் இனப்பிரச்சினையை தீர்த்து சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் நாட்டில் ஏற்படுத்துவதாக மாயை காட்டி, தமிழ் மக்களினதும் ஏனைய நாட்டு மக்களினதும் ஆதரவை பெற்று ஆட்சிக்கு வந்த போதும் இன்று வரை இனப்பிரச்சினை தீர்வுக்காகவோ, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அன்றாட வாழ்வை சீராக்குவதற்காகவோ எவ்வித உருப்படியான செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. புலிகளோடு மேற்கொண்டுள்ள யுத்த நிறுத்தத்தை காண்பித்து தானொரு சமாதான பிரியன் என்று நிருபிக்க முயலும் ரணில் அதன் மூலம் வெளிநாட்டு கடனுதவிகளைப் பெற்று தென்னிலங்கையில் தன் ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதிலும் அமெரிக்கா மற்றும் உலக நாடுகள் தனக்கு உதவத் தயாராக உள்ளன என பூச்சாண்டிக் காட்டி அரசியல் தீர்வு பற்றி பேசுவதை பின்போட்டு வருவதிலுமே கவனமாக உள்ளார்.

அதேவேளை சமாதான பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஏனைய தமிழ் அரசியல் இயக்கங்களின் தற்பாதுகாப்பு நிலைமையை இல்லாமல் செய்து, அவ்வியக்கங்களின் உறுப்பினர்களையும் தமக்குத் தலையாட்ட மறுக்கின்ற ஏனைய தனி நபர்களையும் புலிகள் தேடித் தேடி அழிக்கும் செயலுக்கு ரணிலும் அவரின் அரசாங்கமும் பகிரங்கமாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. எப்போதுமே ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் புலிகளைப் பாவித்து ஏனைய தமிழ் மாற்று, முற்போக்கு, ஜனநாயக சக்திகளை அழித்தொழிப்பது அவர்களின் தந்திரோபாயமாகவே இருந்திருப்பதை பிரேமதாசா, ஜே.ஆர் ஆகியோரின் ஆட்சியிலும் நாம் கண்டுள்ளோம்.

வடக்கிலும், கிழக்கிலும் கொழும்பிலும் புலிகளின் கொலையாளிகள் ஊடுருவி இருப்பது தமக்குத் தெரியும் என்றும் அவர்களைத் தாம் கைதுசெய்யப் போவதில்லை எனக் கூறும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் கூற்றையும், தாம எந்த வன்முறைகளிலும் கொலைகளிலும் ஈடுபடுவதில்லை என்ற புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் அறிக்கையையும் கேட்டு தமிழ் மக்கள் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவருமே அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சமாதான பேச்சுவார்த்தையில் நடுவராகவும் யுத்த நிறுத்த காலகட்டத்தில் கொலை ,ஆட்கடத்தல், மனித உரிமை மீறல்கள் என்பற்றை கண்காணிக்கும் பொறுப்பை தாமாகவே ஏற்றுக் கொண்டு முன் வந்து செயல்படும் நோர்வே அரசாங்கமும் சூஇலங்கை யுத்த கண்காணிப்புக் குழுவும் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற கேள்வி இன்று பரவலாக மக்களால் கேட்கப்படுகின்றது. தமிழ் ஜனநாயக அரசியல் சக்திகளுக்கும், மனிதஉரிமை வாதிகளுக்கும் தமிழ் சமூகத்தில் சுதந்திரமாக தமது கருத்துக்களை தெரிவிக்கும் தனிநபர்களுக்கும் எதிராக புலிகளால் நடத்தப்படுகின்ற கொடூர செயற்பாடுகளை உறுதியுடன் செயற்பட்டு தடுத்து நிறுத்தாமல், அவற்றை நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தாமல் ஏனோதானோ என செயற்படும் இவர்களை கபட வேடதாரிகள் என கடும் கோபத்துடன் மக்கள் வெறுத்தொதுக்கும் நிலையே இன்று ஏற்பட்டுள்ளது.

ஊடகங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும்
அவற்றின் பக்கச்சார்பு நிலைப்பாடுகளும்

www.tamilarangam.net

தமிழர் சமுதாயத்தில் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்ற கொலைகளையும் அராஜகச் செயல்களையும் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்ற போதிலும் பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பன அவற்றை மூடி மறைப்பதுடன் அச்செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்வதும் இன்றைய தமிழ் ஊடகக் கலாசாரமாக மாறிவிட்டுள்ளது. "தமிழ்த் துரோகிகள்", "காட்டிக் கொடுப்பவர்கள" என்கின்ற அடைமொழிகளின் கீழும் "இனம்தெரியாத துப்பாக்கி நபர்கள்" என்னும் சொற்பதத்தையும் பாவித்து இக்கொலைகளை நியாயப்படுத்தியும் கொலையாளிகளை பாதுகாத்தும் வருகின்றார்கள்.

இதே பாணியிலேயே சமாதானத்துக்காக பல வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கோடிக்கணக்கில் பெருந்தொகை பணத்தை பெற்று பெரும் எடுப்பில் சமாதான பிரச்சாரம் செய்து வருகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. மனித உரிமை, ஜனநாயகம் போன்றவற்றைப் பற்றி இப்போது பேசுவது சமாதான செயற்பாட்டை குழப்பி விடும் என்கின்ற இவர்களின் புத்திகெட்ட சந்தர்ப்பவாத நிலைப்பாட்டினால் இன்று பல தமிழ் , முஸ்லிம் , சிங்கள உயிர்கள் பறிக்கப்பட்டு இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டன.

தென்னிலங்கை அரசியல் சக்திகள்

புலிகளின் பாசிச செயற்பாடுகளை அரசாங்கமோ சர்வதேச சமூகமோ தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத அதேவேளை தென்னிலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகள் மற்றும் இடதுசாரி அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் கூடுதல் அக்கறை எடுத்துச் செயற்பட்டு தமிழர் சமூகத்தில் ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் கருத்துச் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுப்பதாக தெரியவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வான அரசியல் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றி உடனடியாக நாடளாவிய ரீதியில் மக்களிடையே கலந்துரையாடல்களை ஆரம்பிக்கும் படி அரசாங்கத்தை வலியுறுத்தும் எந்தவித முயற்சியிலும் இவ்வெதிர்க் கட்சிகள் செயற்படுவதாக தெரியவில்லை.

இவர்கள் இன்னமும் மிகப் பிற்போக்கானதும் மக்களால் தூக்கியெறியப்பட்டதுமான கருத்துக்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு தமிழர்களுக்கு உரிமை வழங்கினால் சிங்களவர்களின் நாடு பிளவுபட்டுவிடும், அல்லது சிங்களவர்கள் அடிமைகளாகிப் போய்விடுவார்கள். என்கின்ற கருத்தை பிரச்சாரம் செய்வதோடு எப்படியாவது அதிகாரத்திற்கு வந்து விட்டால் போதும் என்கின்ற வகையில் செயல்படுவதும் மிக மிக வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

இன்னும் சில குழுக்களும் தனிநபர்களும் தங்களை இடதுசாரிப் புரட்சியாளர்கள் என சொல்லிக் கொண்டு புலிகளின் பாசிச செயல்பாடுகளையெல்லாம் "அது தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் அதற்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்" என பிதற்றித் திரிகின்றனர். இறுதியாக தென்னிலங்கையில் இருக்கும் எவருக்குமே இன்று புலிகளினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ சமூகத்தின் ஆன்மாவாக விளங்குகின்ற ஜனநாயக சக்திகளைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

சிங்களப் பேரிவாதமும், தமிழ் தீவிரவாத பாசிசமும் ஒன்றையொன்று பாலூட்டி வளர்க்கும் ஜனநாயக விரோத சக்திகள் என்பதை புரிந்து கொள்ளும் அளவிற்குக் கூட இவ்விடதுசாரிப் புரட்சியாளர்களுக்கு அடிப்படை அரசியல் அறிவு இல்லாததைக் கண்டு வெட்கப்பட வேண்டிய நிலையே இங்கு காணப்படுகின்றது. நாளை இச்சிங்களப் பேரினவாதமும் அதனால் ஊட்டி வளர்க்கப்பட்டு இன்று பூதகரமாய் வளர்ந்திருக்கும் தமிழினவாத தீவிரவாதமும் சேர்ந்து இந்நாட்டின் சாதாரண தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை சின்னாபின்னமாக்கி கூறுபோடும் வரை இம்முற்போக்குத் புரட்சிவாதிகள் இப்படியேதான் ஊழையிட்டுக் கொண்டு இருக்கப்போகின்றார்களா?

தட்டி எழுப்பப்பட வேண்டிய தமிழ் பேசும் சமூகத்தின் மனசாட்சி

இன்று தமிழ் சமூகத்தின் உண்மையான மனசாட்சியை தட்டியெழுப்பி தமிழ் சமூகத்தை ஆக்கபூர்வமான திசையில் வழிநடத்த வேண்டும் என விரும்பிய ஓர் நல்ல மனிதனான ரொபோர்ட் என்று அழைக்கப்படும் சுபத்திரன் கொல்லப்பட்டுள்ள இவ்வேளையில் தமிழ் சமூகத்தின் உண்மையான விடுதலை, இலங்கை வாழ் மக்கள் அனைவருக்குமான ஜனநாயகம் என்பவற்றில் அக்கறை கொண்ட அனைவரும் தம் சொந்த மனசாட்சிகளை தட்டியெழுப்பிக் கொள்ள வேண்டும்.

இன்றுள்ள சூழ்நிலையில் ஜனநாயக விரோத இலங்கை அரசாங்கத்தினது கபட நாடகத்திலிருந்தும், புலிகள் இயக்கத்தின் பாசிச செயற்பாட்டிலிருந்தும் தமிழ் பேசும் சமூகத்தை மீட்டெடுக்க சர்வதேச சமூகமோ தென்னிலங்கையில் உள்ள ஏனைய அரசியல் சக்திகளோ முன்வரப் போவதில்லை. புலிகளைக் கொண்டே தமிழர்களையும், தமிழ் சமூகத்தின் ஜனநாயக விழுமியங்களையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, அமெரிக்கா உட்பட உலக நாடுகளின் உதவியோடு புலிகளை அழித்து விட்டு மீண்டும் இந்நாட்டில் பேரினவாத அரசியல் நடத்தலாம் எனத் திட்டமிடும் ஐக்கிய தேசிய கட்சி அரசியலின் உண்மை சொருபத்தை தமிழர்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பதவி வெறிபிடித்த ஐக்கிய தேசிய கட்சியோடு கைகோர்த்தபடி தமிழ் சமூகத்தை தன் காலடியில் மண்டியிடச் செய்து அவர்களை மந்தைகள் போல் வழிநடத்தவும் ஐக்கிய தேசிய கட்சிக்கு தேவையான போதெல்லாம் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளை அழித்தொழிப்பதற்கு ஒத்தாசை வழங்கி தன் நன்றிக்கடனை தீர்த்துக் கொள்ள நினைக்கும் விடுதலைப் புலிகளின் கொடிய திட்டத்தையும் தமிழ்ச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விரு சக்திகளும் ஒருவருக்கொருவர் எதிரிகள் போல் தோன்றினாலும் தம் இருவருக்கும் பாதகமான சூழ்நிலை வருகின்ற போது எவ்வித நிபந்தனைகளுமின்றி கைகளைக் கோர்த்துக் கொண்டு மக்களைக் கொன்றொழித்து காட்டாட்சி புரிந்ததை கடந்த இரு தசாப்தங்களில் நாம் பல முறை கண்டுள்ளோம். இதிலிருந்து விடுபட வேண்டுமாயின் தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால இருப்பிலும் வளர்ச்சியிலும் அக்கறை உள்ள, சுய பிரக்ஞையும், நெஞ்சுரமும், தியாக உணர்வும் கொண்ட ஒவ்வொரு தமிழனும், ஜனநாயகச் சிந்தனை கொண்ட ஒவ்வொரு குடிமகனும் இச்சவாலுக்கு முகம் கொடுக்க முன்வருவதைத் தவிர வேறு வழியில்லை.

www.tamilarangam.net

தமிழ் மக்களின் உண்மையான விடுதலையை நேசித்து அதற்காகவே இன்னுமொரு சகோதர தமிழனின் துப்பாக்கியால் உயிர் பறிக்கப்பட்டு சாய்ந்து கிடக்கும் சுபத்திரனின் பூதவுடலுக்கு முன்னால் நின்று நாம் இன்று உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்நாட்டில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மறுத்தது மட்டுமன்றி, சகல மக்களினதும் சமாதான சகவாழ்வை சிதைக்க கங்கணம் கட்டியிருக்கும் சிங்கள பேரினவாதமும், ஜனநாயக விரோத தமிழ் பாஸிச இனவாத தீவிரவாதமும், இவை இரண்டோடும் கைகோர்த்து எம் தேசத்தை மொத்தமாகச் சூறையாட தருணம் பார்த்திருக்கும் ஏகாதிபத்திய சக்திகளின் சதித்திட்டமும் இன்று வெட்ட வெளிச்சமாகத் தெரியத் தொடங்கியுள்ளது.. இவை மூன்றுக்கும் எதிராக மக்கள் வீதியில் இறங்க வேண்டிய காலம் வந்துவிட்டது.. மனதுக்குள் குமைவதை விட்டு பெருந்திரளாக வீதிகளில் இறங்கி உலக வரலாற்றில் மக்கள் நிரூபித்த அதேபாடத்தை இங்கும் நாம் நிரூபிப்போம்.

“யாமார்க்கும் குடியல்லோம்“

19.06.2003

- மாற்றுக் கருத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்குமான தமிழர் பேரவை -